<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>அ.வ.எண். 121/2020</u>

பெயர் : கோபால்சாமி
சாட்சி – பி.வா.சா–2 நாள்: 24.02.2026

---

**<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)</u>**

1. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கோவிந்தராஜ் எனது பக்கத்து தோட்டத்துக்காரர் மற்றும் பங்காளி முறைக்காரர். இந்த வழக்கினை கோவிந்தராஜ் மற்றும் பாலமுருகன் ஆகியோர் தாக்கல் செய்துள்ளார்கள். அவர்கள் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் கோவிந்தராஜ் இடத்தில் பிரச்சனை என்பதால் தாக்கல் செய்துள்ளார்கள். கோவிந்தராஜ் இடத்தையும் சேர்த்து பத்திரத்தில் எழுதி விட்டார்கள். யார் எழுதி விட்டார்கள் என்றால் பாலமுருகன் மற்றும் தங்கவேல் ஆகியோர் எழுதி விட்டார்கள்.

2. நான் வழக்கு சம்பந்தமான பத்திரங்களை படித்துப் பார்த்து உள்ளேனா என்றால் இல்லை. கோவிந்தராஜின் தாத்தாவின் பெயர் கருப்பண்ணசாமி என்றால் சரிதான். கோவிந்தராஜின் அண்ணன் பெயர் ராமசாமி ஆகும். கோவிந்தராஜ், கருப்பண்ணசாமி மற்றும் ராமசாமி ஆகியோர் பாகம் பிரித்துக் கொண்ட ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. கருப்பண்ணசாமிக்கு க.ச.35, 36/1 ஆகிய காலைகளில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.35 காலைக்கு மேல் புற உள்ள காலையானது கருப்பண்ணசாமிக்கு தான் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். க.ச.35, 36/1 ஆகிய காலைகளுக்கு தென்புறமாக கிழமேல் இட்டேரி உள்ளது என்றால் சரிதான். கருப்பண்ணசாமியின் பங்கிற்கு மேற்படி கிழமேல் இட்டேரி வழியாக செல்ல முடியும் என்றால் சரிதான்.

3. கருப்பண்ணசாமியின் அண்ணன் ராமசாமிக்கு க.ச.35 காலையில் வடபுற எல்லையில் 3.45 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட பூமியை ஒட்டி வடபுறமாக ஒரு கிழமேல் இட்டேரி செல்கிறது என்றால் சரிதான். கருப்பண்ணசாமிக்கு ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட 3.45 ஏக்கர் பரப்பளவு பூமியில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினைக்கு

பின்னிட்டு கருப்பண்ணசாமி என்பவர் வடபுறம் உள்ள கிழமேல் இட்டேரிக்கு வடபுறமாக க.ச.26, க.ச. 27 காலைகளில் 5.61 ஏக்கர் பூமி கிரையம் பெற்றுள்ளார் என்றார் சரிதான்.

4. கருப்பண்ணசாமி அவர் வடபுறமாக க.ச.26, க.ச. 27 காலைகளில் கிரயம் பெற்ற பூமிக்கு சென்று வருவதற்கு ராமசாமியிடம் அனுமதி பெற்று ராமசாமிக்கு பாத்தியப்பட்ட 3.45 ஏக்கர் பரப்பளவு பூமியில் கிழக்கோட்டில் தடமாக பயன்படுத்துவதற்கு அனுமதி பெற்று சென்று வந்தார் என்றால் சரிதான். ராமசாமியின் அனுமதியின் பெயரில்தான் கருப்பண்ணசாமி பயன்படுத்தி வந்தார் என்றும், அந்த அனுமதி வாய்மொழியாக வழங்கப்பட்டது என்றும், எவ்வித பத்திரங்களிலும் எழுதப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

5. கருப்பண்ணசாமி மற்றும் ராமசாமி ஆகியோர்களது பட்டாவை பார்த்துள்ளேன். ராமசாமி க.ச. 35/1 காலைக்கு பட்டா வாங்கியுள்ளார். கருப்பண்ணசாமி க.ச.35/2, க.ச.35/3 ஆகிய காலைகளுக்கு பட்டா வாங்கியுள்ளார். க.ச.35/2 காலை பூமியை தடமாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரிதான். கருப்பண்ணசாமி ராமசாமி இடம் அனுமதியின் பெயரில் தடமாக பயன்படுத்தி வந்த பகுதியை நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உட்பிரிவு செய்யும் போது தன்னுடையது என்று தவறாக கூறி தனது பெயரில் பட்டா வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

6. ராமசாமி தனது க.ச.35/1 காலை பூமியை பிரதிவாதிகள் மற்றும் வேறு நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ராமசாமியிடம் கிரயம் பெற்ற நபர்கள் க.ச. 35/2 காலை பூமியை அவர்களது கிரயம் பெற்ற பூமிக்கு சென்று வர தடமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. கடந்த 26.01.2021 வாதிகள் க.ச. 35/2 காலை மேற்புற எல்லையில் தென்புறமாக கம்பி வேலி போட முயற்சித்தார்கள் என்றால் ஏற்கனவே முள்வேலியாக இருந்த இடத்தில் அதனை அகற்றி விட்டு கம்பிவேலி போட முயற்சித்தார்கள். நான் வழக்கிற்காக ஏற்கனவே முள்வேலி இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. வாதிகள் கம்பி வேலி போடும்போது பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்றால் சரியல்ல கம்பி வேலி போட்ட பின்னர் அதனை உடைத்து எறிந்தார்கள். எப்போது உடைத்தார்கள் என்றால் கம்பி வேலி போட்ட பின்னர் நான்கு, ஐந்து நாட்கள் கழித்து உடைத்தார்கள். நான் எனது முதல் விசாரணையில் காவல் நிலையத்தில் என்னை

விசாரித்தார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எதற்காக என்னை விசாரித்தார்கள் என்றால் பிரதிவாதிகள் கம்பி வேலி மற்றும் பைப் லைனை உடைத்ததற்காக கோவிந்தராஜ் அளித்த புகாரின் பேரில் என்னையும் அழைத்து விசாரித்தார்கள். நான் சொல்வது தவறு என்றும் கம்பிவேலியும் பைப் லைனும் உடைக்கப்படவில்லை என்றும் கோவிந்தராஜ் சொன்னதன் பேரில் அவருக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. க.ச.35/2 காலையை கோவிந்தராஜ் தடமாக பயன்படுத்துவதற்கு பிரதிவாதிகள் யாரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் பிரதிவாதிகள் தடமாக பயன்படுத்துவதை வாதிகள் ஆட்சேபிக்கிறார்கள் என்றால் சரிதான். க.ச. 35/2 காலை பூமியானது பிரதிவாதிகளின் கிரைய முன்னோர்களுக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்டது என்பதால் அதனை பயன்படுத்துவதற்கு பிரதிவாதிகளுக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. கோவிந்தராஜின் தாத்தா கருப்பண்ணசாமிக்கு ராமசாமி வாய்மொழியாக தடமாக பயன்படுத்துவதற்கு கொடுத்த அனுமதியின் பேரில்தான் வாதிகளும் தற்போது பயன்படுத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல. க.ச.35/2 காலை பூமியை அவர்களது தனிப்பட்ட பூமியாக உரிமை கொண்டாட அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் கோவிந்தராஜிற்கு உறவினர் என்பதாலும் பக்கத்து தோட்டத்துக்காரர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.24 18:31:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.